**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 24/2022** **Date:13.02.2026.**

**(PW1)-** நடராஜன்

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. வழக்கு சொத்தை நான் அளவீடு செய்து தான் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து 2 புல எண்ணில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது கிரய பத்திரத்தில் வரைபடம் இணைக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து 2 சர்வே எண்களில் அமைந்திருந்தாலும் நாளது தேதி வரை தாவா சொத்து உட்பிரிவு செய்யபடவில்லை என்றால் சரியல்ல, உட்பிரிவு செய்யப்பட்டது. உட்பிரிவு செய்யப்பட்டது என்பதை காட்ட நீதிமன்றத்தில் நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது போல் தாவா சொத்து உட்பிரிவு செய்யப்படவில்லை என்றாலும் நான் அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. சர்வே எண் 716/8 எண்ணில் எத்தனை செண்ட் சொத்து உள்ளது என்றால் 8.804 செண்ட் ஆகும். சர்வே எண் 716/6 ன் மொத்த விசிஸ்திரணம் என்ன என்றால் 2.5 செண்ட் ஆகும். மேற்படி இரண்டு சர்வே எண்களிலும் நான் எவ்வளவு செண்ட் கிரயம் பெற்றுள்ளேன் என்ற விபரத்தை எனது பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அதே போல் மேற்படி சர்வே எண்களில் எந்த பகுதியில் உள்ள கிரயம் பெற்றுள்ளேன் என்பதை நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை அடையாளம் காட்டும் விதமாக நான் முறையான சங்கதிகளை நான் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள தீர்வை ரசீதுகள் மேற்படி சர்வே எண்களில் ஒரு பகுதிகாக செலுத்தப்பட்ட வரி ரசீது என்றாலும் முழு சொத்துக்கு அல்ல என்றாலும் சரியல்ல. நான் உட்பிரிவு செய்ய வருவாய் துறை அதிகாரிகளை முறையாக அனுகாமல் நேரடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தை அளவீடு செய்து எல்கை நிர்ணயம் செய்ய நில அளவயருக்கு மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவின் அடிப்படையில் எனது இடத்தை அளவீடு செய்தார்கள் என்றால் அளவீடு செய்து உட்பிரிவு செய்தார்கள். எனது சொத்தை சுற்றிலும் எல்கை கற்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நில அளவையர் அளவீடு செய்தப்போதும் ஏற்கனவே இருந்த எல்கை கற்களில் தான் அளவுகள் வந்தது என்றால் சரிதான்.

4. நான் மேற்படி அளவீடு சரியில்லை என்று ஆட்சேபனை செய்தேனா என்றால்

ஆட்சேபனை செய்தேன். நான் வருவாய் துறை அதிகரிகளுக்கு தாலுகா சர்வேயரின் அளவீடு குறித்து ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றாலும் இந்த வழக்கை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். நில அளவையரின் அளவீடு தவறு என்று எனது வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளின் சொத்து எனது சொத்தை விட உயர்வாக உள்ளது என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளின் சொத்தை ஆக்கிரமித்து நான் எல்கை சுவர் அமைக்க முயற்சி செய்ததால் தான் பிரதிவாதிகள் எனக்கு ஆட்சேபனை தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல.

5. நான் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் யாவும் பொய்யானது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நீதிமன்ற ஆனையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானது அல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.